நவம்பர் – 26

TNPSC துளிகள்

- பெங்களூரு தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ஜியோஸ்மார்ட் இந்தியா 2022 உச்சி மாநாடானது ஹைதராபாத்தில் தொடங்கப் பட்டது.
- ஆசிய டேபிள் டென்னிஸ் கோப்பைப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் வீராங்கனை என்ற சாதனையை மணிகா பத்ரா படைத்துள்ளார்.

தமிழ்நாடு செய்திகள்

பொதுத் தணிக்கை இயக்குனர்

- பொதுத் தணிக்கை இயக்குனர் என்ற ஒரு பதவியினை உருவாக்கிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- இதற்காக இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குப் பணியில் இருந்து ஒரு அதிகாரியை அயற்பணி அடிப்படையில் பணியமர்த்தியுள்ளது.
- உள் தணிக்கைத் துறைகளின் பணிகளை வலுப்படுத்துவதும், நெறிப்படுத்துவதும் இந்த அதிகாரியின் முதன்மைப் பொறுப்பாக இருக்கும் என்பதோடு, இதன் மூலம் அவர்கள் தொழில் ரீதியாக தங்கள் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வர்.

தேசியச் செய்திகள்

இந்திய மாநிலங்கள் பற்றிய புள்ளிவிவரங்களின் கையேடு 2021-22



- இந்திய ரிசர்வ் வங்கியானது, "இந்திய மாநிலங்கள் பற்றிய புள்ளி விவரங்களின் கையேடு 2021-22" என்ற தலைப்பிலான தனது ஏழாவது புள்ளி விவர அறிக்கையினை வெளியிட்டது.

- இது இந்தியாவின் பிராந்தியப் பொருளாதாரங்கள் பற்றிய விரிவானத் தரவுகளை வழங்குகிறது.
- சமீபத்திய அறிக்கையில் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டு புதிய பிரிவுகள் சேர்க்கப் பட்டுள்ளன.
- நடப்பு நிதியாண்டில் பேரியல் ரீதியிலான பொருளாதாரக் கண்ணோட்டம் நேர் மறையாக உள்ளது.
- இருப்பினும், இந்தியா இன்னும் உலகளவில் நிலவும் பாதிப்புகளால் பாதிக்கப் பட்டு உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அனைத்து மாநிலங்களுக்கிடையில் கட்டமைப்பு சார்ந்த ஒன்றோடொன்று தொடர்புள்ள புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மையங்களின் அதிகபட்ச திறனைக் கொண்டதாக கர்நாடகா மாநிலம் திகழ்கிறது.
- இதன் மொத்த நிறுவல் திறன் 15,463 மெகாவாட் (MW) ஆகும்.
- அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு (15,225 மெகாவாட்), குஜராத் (13,153 மெகாவாட்) மற்றும் மகாராஷ்டிரா (10,267 மெகாவாட்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

சர்வதேசச் செய்திகள்

தந்த வர்த்தகம் தொடர்பான வாக்கெடுப்பில் இந்தியாவின் வாக்கு

- ஆப்பிரிக்க யானைத் தந்தங்களை வணிக ரீதியில் விற்பனை செய்வதற்கான ஒரு வாக்கெடுப்பில் இந்தியா முதன்முறையாக விலகியுள்ளது.
- இது எட்டு சிவிங்கிப் புலிகளை இடம் மாற்றச் செய்வதற்காக நமீபியாவுடன் மேற் கொள்ளப்பட்ட ஒரு சரியீட்டு ஒப்பந்தத்தின் மீதான சந்தேகங்களை வலுப்படுத்தச் செய்கிறது.
- போஸ்வானா, நமீபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளின் அரசாங்கங்களால் குவித்து வைக்கப்பட்டுள்ள யானைத் தந்தங்களை வணிக ரீதியாக விற்பனை செய்ய அனுமதிக்கும் திட்டத்தை ஜிம்பாப்வே அறிமுகப்படுத்தியது.
- CITES என்பது சர்வதேச வர்த்தகத்தில் நிலவும் அச்சுறுத்தல்களில் இருந்து அழிந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கான ஒரு பலதரப்பு ஒப்பந்தம் ஆகும்.
- CITES ஆனது முற்றிலும் வர்த்தகத்தைத் தடை செய்வதன் மூலம் அல்லது கடுமையான கட்டுப்பாடுகளை நிர்ணயிப்பதன் மூலம் அதிகப் பாதிப்பிற்கு உள்ளாக்கப்படும்

38,000க்கும் மேற்பட்ட உயிரினங்களைப் பாதுகாக்கிறது.

சுற்றுச்சூழல் செய்திகள்

இழப்பு மற்றும் சேத நிதி

- எகிப்தில் உள்ள ஷர்ம் எல்-ஷேக் நகரில் நடைபெற்ற COP27 மாநாடானது முதன் முதலாக இழப்பு மற்றும் சேத நிதியை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளது.
- பருவநிலை தீவிரத்தினால் ஏற்படும் பாதிப்புகளால் வளர்ந்து வரும் நாடுகளுக்கு ஏற்படும் இழப்பினை ஈடு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆனால் அனைத்துப் புதைபடிவ எரிபொருட்களையும் "படிப்படியாகக் குறைக்கச் செய்வதற்கான" இந்தியாவின் முன்னெடுப்பு போன்ற பிற முக்கிய துறைகளில் சிறிது முன்னேற்றம் காணப்படுகிறது.

உடலின் மையப் பகுதியில் ஆரஞ்சு நிறம் கொண்ட புறா இனம்

- 140 ஆண்டுகளுக்குப் பிறகு உடலின் மையப் பகுதியில் ஆரஞ்சு நிறம் கொண்ட புறா இனம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது முதன்முதலாக மற்றும் கடைசியாக 1882 ஆம் ஆண்டில் தென்பட்டது.

- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், பெர்குசன் தீவின் மிக உயரமான சிகரமான கில்கெரான் மலையின் மேற்கு சரிவுப் பகுதியில் இந்த இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.
- வரலாற்றில் இந்த இனம் தென்படுவது இது இரண்டாவது முறையாகும்.
- இது கருப்பு மற்றும் ஆரஞ்சு நிற இறகுகள் மற்றும் சிவப்பு நிறக் கண்கள் கொண்ட ஒரு பெரிய, நிலப்பரப்பு சார்ந்த புறா இனம் ஆகும்.
- இந்த இனமானது, பப்புவா நியூ கினியாவில் உள்ள பெர்குசன் தீவில் மட்டுமே காணப் படுகிறது.
- 26.1 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மற்ற அனைத்து உயிரினங்களிலிருந்தும் பிரிந்த இந்த இனமானது ஓடிடிபாப்ஸ் நோபிலிஸ் என்ற இனத்திலிருந்துப் பிரிந்தது.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்த இனங்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட வில்லை என்றாலும், இந்த இனம் மிகவும் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனமாகப் பட்டியலிடப் பட்டது.
- இதன் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை 50 முதல் 249 பறவைகள் ஆகும்.

அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

இணையத் தயார்நிலை அறிக்கை 2022



- 2022 ஆம் ஆண்டு இணையத் தயார்நிலை அறிக்கையானது, அமெரிக்காவில் அமைந்துள்ள ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான போர்ட்லன்ஸ் இன்ஸ்டிட்யூட் என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.
- 131 நாடுகளின் நான்கு வெவ்வேறு துறைகளில், அதாவது தொழில்நுட்பம், மக்கள், நிர்வாகம் மற்றும் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இணைய அடிப்படையில் உள்ள தயார்நிலை சூழலை இந்த அறிக்கை மதிப்பிடுகிறது.
- இந்த குறியீட்டில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிற நிலையில், சிங்கப்பூர் மற்றும் ஸ்வீடன் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- இந்தக் குறியீட்டில் மிகவும் வேகமாக முன்னேறி வரும் நாடு சிங்கப்பூர் ஆகும்.
- சிங்கப்பூர் நாடானது, டென்மார்க் (6வது) மற்றும் பின்லாந்து (7வது) ஆகிய நாடுகளைப் பின்னுக்கு தள்ளி 7வது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- ஆசிய பசிபிக் நாடுகளில் சிறந்து விளங்கும் நாடாக சிங்கப்பூர் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகியவை உள்ளன.

- 36 குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் பிரிவில் உக்ரைன் மற்றும் இந்தோனேசியாவிற்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

மாநிலச் செய்திகள்

மணிப்பூர் ஷாங்காய் திருவிழா

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் G.கிஷன் ரெட்டி, ஷாங்காய் எத்தினிக் பூங்காவில் '2022 ஆம் ஆண்டின் மணிப்பூர் ஷாங்காய் திருவிழாவினை' தொடங்கி வைத்தார்.
- வடகிழக்கு மாநிலத்தில் உள்ள ஆறு மாவட்டங்களில் அமைந்துள்ள 13 இடங்களில் நவம்பர் 30 ஆம் தேதி வரை இந்த 10 நாட்கள் அளவிலான விழா நடைபெறுகிறது.
- இத்திருவிழாவானது 'ஒற்றுமையின் திருவிழாவாக' கொண்டாடப்படுகிறது.
- இது மக்களிடையே நிலத்தின் மீது உரிமையுடையவர் என்ற ஒரு உணர்வையும் பெருமையையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

காந்தி மண்டேலா விருது

- தர்மசாலாவில் உள்ள தெக்சென் சோலிங்கில், 14வது தலாய் லாமா அவர்களுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான காந்தி மண்டேலா விருதானது வழங்கப்பட்டது.
- திபெத்திய ஆன்மீகத் தலைவரான இவர் புது டெல்லியில் உள்ள காந்தி மண்டேலா அறக்கட்டளையின் அமைதிப் பரிசைப் பெறுகிறார்.

- திபெத்திய ஆன்மீகத் தலைவரான இவர் 1989 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவர் ஆவார்.

குவேம்பு ராஷ்ட்ரிய புரஸ்கார்

- தமிழ் எழுத்தாளரும் நாவலாசிரியருமான இமயம் என்கிற V. அண்ணாமலை குவெம்பு ராஷ்ட்ரிய புரஸ்கார் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அவரது புனைவுக் கதைகளான கோவேறு கழுதைகள் மற்றும் பெத்தவன் ஆகியவை ஆங்கிலம் மற்றும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.
- மறைந்த கன்னட எழுத்தாளர் குவெம்புவின் நினைவாக இந்த விருதானது நிறுவப் பட்டது.

அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசு 2021

- முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் ஹமீத் அன்சாரி, 2021 ஆம் ஆண்டின் அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசை கல்வித் துறையில் செயலாற்றி வரும் பிரதாம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு

வழங்கினார்.

- நாட்டின் குழந்தைகளுக்கு, குறிப்பாக கோவிட்-19 பெருந்தொற்று காலத்தின் போது தரமான கல்வியை வழங்குவதனை உறுதி செய்வதில் பிரதாம் அமைப்பின் பணியை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- பெருந்தொற்று காலத்தின் மத்தியில் பள்ளிகள் மூடப்பட்ட போதும், குழந்தைகள் கல்வி கற்பதற்கு ஏதுவான வகையில் கல்வியை வழங்குவதற்கு எண்ணிமத் தொழில் நுட்பத்தையும் பிரதாம் நிறுவனம் பயன்படுத்தியது.
- இந்த அறக்கட்டளையின் வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கையானது (ASER), மூன்று கண்டங்களில் உள்ள 14 நாடுகளில் உள்ள கல்வி சார்ந்த திட்ட விளைவுகள் மற்றும் கற்றல் குறைபாடுகளை மதிப்பிடுவதற்கு ஒரு முன்மாதிரியாக செயல்படுகிறது.
- அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசு, இந்திரா அவர்களின் இலட்சியங்கள் மற்றும் குறிக்கோள்களை முன்மாதிரியாகக் கொண்ட நபர்களுக்கு வழங்கப் படுகிறது.

லச்சித் பர்புகானின் 400வது பிறந்தநாள் கொண்டாட்டம்

- அஹோம் படைப்பிரிவின் படைத் தளபதி லச்சித் பர்புகானின் 400வது பிறந்தநாளின் 3 நாட்கள் அளவிலான கொண்டாட்டம் புது டெல்லியில் தொடங்கியது.
- அஹோம் வம்சத்தினர் மற்றும் லச்சித் பர்புகான் ஆகியோரின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் குறித்தக் கண்காட்சியும் நடைபெற்றது.
- பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கின் புவியியலையும், அதன் அருகிலுள்ள மலைகளையும் பற்றி நன்கு அறிந்த அவர் ஒரு சிறந்த இராணுவத் தலைவர் ஆவார்.
- மன்னர் சரத்வாஜ் சிங்கா தலைமையிலான அஹோம் இராச்சியத்தின் ஐந்து போர்புகன்களில் ஒருவராக அவருக்கு நிர்வாக, நீதித்துறை மற்றும் இராணுவப் பொறுப்புகள் வழங்கப்பட்டன.
- 1671 ஆம் ஆண்டு சராய்காட் போரில் அவர் மேற்கொண்ட தொலைநோக்கு மிக்க மற்றும் சிறந்தத் தலைமைக்காக அவர் பெருமளவில் நினைவு கூரப்படுகிறார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★